# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

**<u>OS.No.8/2024</u>**

PW2– பொன்னுசாமி நாள். 20.04.2026

**<u>சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

என்னுடைய சொந்த ஊர் நெய்க்குப்பை ஆகும். வாதி வேப்பந்தட்டையைச் சேர்ந்தவர். அவர் குடியிருப்பது பெரம்பலூர் ஆகும். நெய்குப்பைக்கும் வேப்பந்தட்டைக்கும் இடையே சுமார் 7 கி.மீ. இருக்கும். வாதியை நான் படித்த காலத்தில் இருந்தே தெரியும். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதியை எப்படி தெரியும் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்வதற்கு முன்பு நீதிமன்றத்தில் வேறு நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை. புரோநோட்டில் நான் கைரேகை வாங்கினேனா என்றால், பிரதிவாதிதான் ரேகை வைத்தார். அந்த ரேகை யாருடைய ரேகை என்று நான் எழுதவில்லை. நான் புரோநோட்டில் எழுதியது என்று குறிப்பிட்டு என் பெயரை கூறியுள்ளேன். பிரதிவாதி எந்த ஊரைச் சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. புரோநோட்டில் 2 ரூபாய் வட்டி என்று எழுதப்பட்டது. சாட்சி கையெழுத்து உள்ள லோகநாதன் பவுத்திரம் என்ற ஊரைச் சார்ந்தவர். அந்த ஊருக்கும் வாதியின் ஊருக்கும் மற்றும் என்னுடைய ஊருக்கும் இடையே எவ்வளவு தூரம் என்று எனக்கு தெரியாது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் தாவா புரோநோட் எங்கு வைத்து எழுதப்பட்டது என்று கூறப்படவில்லை என்றால் சரிதான். மற்றொரு சாட்சி சுப்பையா பாலையூரைச் சார்ந்தவர். என்னுடைய ஊருக்கும் அந்த ஊருக்கும் இடையே சுமார் 5 கி.மீ. இருக்கும். வாதியின் ஊருக்கு 2 கி.மீ. தூரம் இருக்கும். புரோநோட் எழுதும் இடத்திற்கு நான் போவதற்கு முன்பே சுப்பையாவும், வேலுச்சாமியும் இருந்தார்களா என்றால், நானும், சுப்பையாவும் சொந்த வேலை காரணமாக வேலுச்சாமியை பார்க்க சென்றோம். நாங்கள் போவதற்கு முன்பே லோகநாதன் வாதியின் வீட்டில் இருந்தார். லோகநாதன் வாதி வீட்டில் மண்வெட்டி வேலை செய்துகொண்டிருந்தார். என்னுடைய

பேனாவால் எழுதி எல்லோரும் அதே பேனாவால் சாட்சி கையெழுத்து போட்டார்களா என்றால் நான் என்னுடைய பேனாவால் எழுதினேன். மற்றவர்கள் அவரவர்கள் பேனாவால் கையெழுத்து செய்தார்கள். ஏற்கனவே, வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். ரூபாய் பத்து இலட்சத்தை வாதி 500 ரூபாய் தாள்களாக கொடுத்தார். புரோநோட்டில் ஏற்கனவே வாங்கி வைத்திருந்தார்களா என்றால், நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது சேகர் கொண்டுவந்தார். நான் உரிமம் பெற்ற பதிவு எழுத்தர் கிடையாது. வேண்டியவர்களுக்கு எழுதிகொடுப்பேனா என்றால் இல்லை. சேகர் எழுதிக்கொடுக்கசொன்னார், எழுதிக்கொடுத்தேன். நான் பாண்டு எழுதுவேன் என்ற விவரம் சேகருக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. எனக்கு எழுத தெரியுமா என்று கேட்டார். வாதி என்னிடம் பாண்டு எழுதி தருமாறு கேட்கவில்லை. புரோநோட்டில் ஸ்டாம்ப் ஒட்டி சேகர் கொண்டுவந்தார். எவ்வளவு ரூபாய்க்கு எவ்வளவு ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டவேண்டும் என்று எனக்கு தெரியாது. நான் வாதிக்கு பால்ய நண்பர் என்பதால் வாதிக்காக தாவா புரோநோட்டை நான் தயார் செய்து அவருக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளது போன்று 27.04.2022-ம் தேதி வாதியிடம் ரூபாய் பத்து இலட்சத்தை பிரதிவாதி கடனாக பெறவில்லை என்றும் அதற்கு ஆதரவாக தாவா புரோநோட்டை பிரதிவாதி எழுதிதரவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.